விளம்பர எண். 03 / 2017
நாள் : 09.05.2017

**தமிழ்நாடு அரசு**

# ஆசிரியர் தேர்வு வாரியம்

4வது தளம், ஈ.வெ.கி. சம்பத் மாளிகை, டி.பி.ஐ வளாகம், கல்லூரி சாலை, சென்னை – 600 006

## அறிவிக்கை / விளம்பரம்

2016–2017ம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித்துறை மற்றும் இதர துறைகளின் கீழ் உள்ள பள்ளிகளில் முதுகலை ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை–1 பணியிடங்களுக்கான நேரடி நியமன பணித்தெரிவிற்கு தகுதியான பணிநாடுநர்களிடமிருந்து 30.05.2017 பிற்பகல் 11.59 மணி வரை **இணையவழியாக மட்டும் (online mode)** விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண். | பதவியின் பெயர் மற்றும் ஊதிய விகிதம் | பணித்தொகுதி | பதவிக்குறியீடு | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | முதுகலை ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை–1 ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4800 | தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி | 17PG | 1663* |

*நடப்புப் பணியிடங்கள் – 1636 மற்றும் பின்னடைவுப் பணியிடங்கள் – 27

### 1. முக்கியமான நாட்கள்

| | | | |
|---|---|---|---|
| அ | அறிவிக்கை நாள் | : | 09.05.2017 |
| ஆ | இணையவழி விண்ணப்பம் சமர்ப்பித்தல் துவங்கும் நாள் | : | 10.05.2017 |
| இ | இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் | : | 30.05.2017 |
| ஈ | எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் | : | 02.07.2017 |

**2. பாட வாரியாக காலிப்பணியிடங்கள் (பின்னடைவுப் பணியிடங்களை உள்ளடக்கியது) பின்வருமாறு.**

| Commual Turn | Tamil | English | Mathematics | Physics | Chemistry | Botany | Zoology | History | Geography | Economics | Commerce | Political Science | Bio Chemistry | Micro Biology | Home Science | Telugu | Phy. Dir. Gr-I |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| GT | 38 | 40 | 31 | 31 | 29 | 15 | 18 | 23 | 3 | 24 | 22 | 4 | | | 1 | | 7 |
| GT T | 9 | 10 | 7 | 7 | 8 | 3 | 4 | 6 | 1 | 6 | 5 | 1 | | | 1 | | 2 |
| GT W | 17 | 17 | 13 | 13 | 11 | 7 | 7 | 10 | 2 | 11 | 9 | 2 | | | | | 4 |
| GT WT | 3 | 4 | 4 | 3 | 4 | 1 | 2 | 3 | | 2 | 2 | 1 | | | | | |
| GT VI | 3 | 3 | | | | | | 1 | | 5 | 1 | | | | | | |
| GT PH | | | 1 | 2 | 2 | | | | | | | | | | | | |
| BC | 32 | 34 | 26 | 26 | 25 | 14 | 16 | 24 | 3 | 18 | 18 | 3 | | | 1 | | 5 |
| BC T | 8 | 9 | 6 | 6 | 6 | 3 | 3 | 4 | 1 | 6 | 5 | 1 | | | 1 | | 2 |
| BC W | 14 | 13 | 11 | 12 | 11 | 6 | 5 | 9 | 1 | 8 | 7 | 1 | | | | | 2 |
| BC WT | 3 | 5 | 4 | 2 | 2 | 1 | 2 | 2 | | 3 | 3 | 1 | | | | | 1 |
| BCM | 4 | 4 | 2 | 3 | 3 | 1 | 2 | 3 | | 3 | 3 | | | | 1 | | 1 |
| BCM T | 1 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | | | 1 | | | | | | |
| BCM W | 2 | 1 | 2 | 2 | 2 | | 1 | 1 | | 1 | | 1 | | | | | |
| BCM WT | 1 | 1 | | | | 1 | | | | | | | | | | | |
| MBC | 23 | 26 | 20 | 20 | 19 | 8 | 11 | 17 | 1 | 14 | 15 | 3 | | | 1 | | 4 |
| MBC T | 7 | 6 | 5 | 5 | 4 | 4 | 4 | 5 | 1 | 4 | 3 | | 1 | | | | 1 |
| MBC W | 10 | 12 | 9 | 9 | 8 | 4 | 5 | 8 | 1 | 7 | 6 | 1 | | | | | 3 |
| MBC WT | 2 | 2 | 2 | 1 | 2 | 1 | 1 | 1 | | 1 | 1 | | | | | | |
| SC | 18 | 18 | 15 | 14 | 13 | 8 | 9 | 11 | 2 | 11 | 10 | 2 | | | | 1 | 4 |
| SC T | 4 | 5 | 4 | 4 | 4 | 2 | 2 | 3 | | 3 | 2 | | | | | | 1 |
| SC W | 8 | 9 | 5 | 7 | 7 | 4 | 4 | 6 | | 5 | 5 | 1 | | | 1 | | |
| SC WT | 2 | 1 | 3 | 1 | 1 | | 1 | 1 | 1 | 1 | 1 | | | | | | 1 |
| SCA | 4 | 4 | 3 | 2 | 2 | 1 | 2 | 3 | 1 | 3 | 3 | | | | | | |
| SCA T | 1 | 1 | 1 | 1 | 1 | | | | | | | 1 | | 1 | | | |
| SCA W | 1 | 1 | 2 | 2 | 2 | 1 | | | | 1 | 1 | | | | | | 1 |
| SCA WT | 1 | 1 | | | | | 1 | 1 | | | | | | | | | |
| ST | 1 | 2 | 1 | 2 | 1 | | | 1 | | | | | | | | | |
| ST T | | | | | | 1 | 1 | 1 | | 1 | 1 | 1 | | | | | |
| ST W | 1 | | 1 | | | | | 1 | | 1 | 1 | | | | | | |
| **Total** | **218** | **231** | **180** | **176** | **168** | **87** | **102** | **146** | **18** | **139** | **125** | **24** | **1** | **1** | **7** | **1** | **39** |

***Note:*** *The estimated number of vacancies given above is tentative and subject to modification and inclusion from time to time.*

**ABBREVIATIONS**

| | | |
|---|---|---|
| **GT** : General Turn | **BC** : Backward Class | **BCM** : Backward Class Muslim |
| **MBC/ DNC** : Most Backward Class/ Denotified Communities | **SC** : Scheduled Caste | **SCA** : Scheduled Caste Arunthathiar |
| **ST** : Scheduled Tribe | **T** : Tamil Medium | **W** : Women |
| **VI** : Visually Impaired | **PH** : Physically Challenged | **G** : General |

**3. இட ஒதுக்கீடு:**

**அ. இன அடிப்படையிலான ஒதுக்கீடு :**

நடைமுறையில் உள்ள அரசாணைகள் / விதிகளின் அடிப்படையில் 69 சதவீத இட ஒதுக்கீடு பின்பற்றப்படும். அதாவது 18 சதவீதம் பட்டியல் இனத்தவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 3 சதவீதம் அருந்ததியர்களுக்கு என முன்னுரிமை அடிப்படையில் பட்டியல் இனத்தவர்களுக்குள் ஒதுக்கீடு செய்யப்படும். 1 சதவீதம் பழங்குடி இனத்தவர்களுக்கும், 26.5 சதவீதம் முஸ்லீம்கள் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், 3.5 சதவீதம் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கும், 20 சதவீதம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 31 சதவீதம் பொதுப் போட்டியின் அடிப்படையில் விதிகளின்படி நிரப்பப்படும்.

பட்டியல் இனத்தவர்களுக்குள், அருந்ததியர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்கள் நிரப்பட்ட பின்னரும், தகுதிபெற்ற அருந்ததியினத்தை சார்ந்தவர்கள் இருப்பின், அத்தகைய கூடுதலான தகுதிபெற்ற அருந்ததியினர் இனத்தை சார்ந்தவர்கள், பிற பட்டியல் இனத்தை சார்ந்தவர்களுடன் தகுதியின் அடிப்படையில் பணித்தெரிவிற்கு கருதப்பட தகுதிபெற்றவர்கள். மேலும் தகுதியான அருந்ததியினர் இனத்தை சார்ந்த பணிநாடுநர்கள் இல்லாத நிலையில், அருந்ததியர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்கள் காலியாக இருப்பின் அப்பணியிடங்கள் அருந்ததியினர் அல்லாத பட்டியல் இனத்தைச் சார்ந்த பணிநாடுநர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

**ஆ. இன அடிப்படையிலான ஒதுக்கீட்டிற்குள் இணை ஒதுக்கீடு:**

**i) மகளிர்களுக்கான ஒதுக்கீடு :** மகளிர்களுக்கென 30 சதவீத ஒதுக்கீடு நடைமுறையில் உள்ள ஆணைகள்/விதிகளின் அடிப்படையில் வழங்கப்படும். பணித்தெரிவிற்கு, போதுமான தகுதிபெற்ற மகளிர் பணிநாடுநர்கள் இல்லாத நிலையில், அவர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்கள் தகுதிபெற்ற அந்தந்த இனத்தினை சார்ந்த ஆண் பணிநாடுநர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

**ii) தமிழ்வழியில் பயின்றவர்களுக்கான ஒதுக்கீடு :** முதுகலை ஆசிரியர் நேரடி நியமன பணித்தெரிவிற்கு, முதுகலைப் பட்டம் மற்றும் இளங்கல்வியியல் ஆகிய இரு பட்டப்படிப்புகளையும் தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் 20 சதவீத ஒதுக்கீடு வழங்கப்படும். பொருத்தமான தகுதிபெற்ற பணிநாடுநர்கள் உள்ள நிலையினைப் பொருத்து இவ்விட ஒதுக்கீடு வழங்கப்படும். அத்தகைய தகுதியான பணிநாடுநர்கள் இல்லாத நிலையில், தமிழ்வழியில் பயின்ற மாணவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிஇடங்கள் பொதுவான பணிநாடுநர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

**iii) மாற்றுத்திறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு:** அரசாணை நிலை எண்.13 மாற்றுத் திறனாளிகள் நலன்(DAP.3.2) துறை, நாள்.02.03.2016–ன்படி பின்வரும் வகையினைச் சார்ந்த மாற்றுத்திறன் படைத்த பணிநாடுநர்கள், முதுகலை ஆசிரியர் பணியிடத்திற்கு தகுதியானவர்கள் என இனம் கண்டறியப்பட்டுள்ளனர்.

| தேவையான உடற் தகுதி | மாற்றுத்திறன் வகை |
|---|---|
| S – அமர்ந்த நிலையில் பணி செய்தல்<br>ST– நின்று கொண்டு பணி செய்தல்<br>H – கேட்டல்/பேசுதல் மூலம் பணி செய்தல்<br>W – நடந்துகொண்டு பணி செய்தல்<br>RW–படித்தல்/எழுதுதல் மூலம் பணி செய்தல் | VI – விழித்திறன் குறைபாடு உடையவர்கள் (100%) – LV வகையை சார்ந்தவர்களும் தகுதியுடையவர்கள்.<br>OA – ஒரு கை (40%to 70%)<br>OL – ஒரு கால் (40% to 70%)<br>BL – இரண்டு கால்களும் (40% to 70%) |

மாற்றுத் திறனாளிகளுக்கென 3 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்படும். தமிழ், ஆங்கிலம், வரலாறு, புவியியல், பொருளியல், வணிகவியல், தெலுங்கு மற்றும் அரசியல் அறிவியல் பாடங்களில் 2 சதவீத காலிப்பணியிடங்கள் விழித்திறன் குறைபாடுடையவர்களுக்கும், 1 சதவீத காலிப்பணியிடங்கள் மேற்கண்டுள்ள உடற்திறன் குறைபாடுடையவர்களுக்கும் (OA/OL/BL) ஒதுக்கீடு செய்யப்படும். அறிவியல் பாடங்களான கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், உயிர் வேதியியல், நுண்ணுயிரியல் ஆகிய பாடங்களில் 3 சதவீத காலிப் பணியிடங்களும் மேற்கண்டுள்ள உடற்திறன் குறைபாடுடைய (OA/OL/BL) மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். **காதுகேளாதவர்களுக்கென இட ஒதுக்கீடு ஏதுமில்லை.**

**4. தகுதிகள்**

**அ) வயது வரம்பு:** பணிநிறைவு வயது 58 ஆண்டுகள் என்பதால், 01.07.2017 அன்று பணிநாடுநர்களின் வயது 57க்கு மேல் இருக்கக் கூடாது.

**ஆ) கல்வித் தகுதிகள்:**

1. 10ம் வகுப்பு, 12ம் வகுப்பு பயின்று பல்கலைக்கழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் (அல்லது) கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இளங்கலைப் பட்டம், முதுகலைப் பட்டம் ஆகியவற்றினை தொடர்புடைய விண்ணப்பிக்கும் பாடத்தில் பெற்றிருப்பதுடன் இளங்கல்வியியல் பட்டத்தினையும் பெற்றிருக்க வேண்டும்.

2. அரசாணை நிலை எண்.361 பள்ளிக் கல்வித்துறை, நாள்.31.12.1999ன்படி மொழிப்பாடம் மற்றும் இதர பாடங்களுக்கு முதுகலை ஆசிரியராக நியமனம் பெற, இளங்கலை மற்றும் முதுகலை பட்டத்தினை ஒரே பாடத்தில் பெற்றிருக்க வேண்டும். உடற்கல்வி இயக்குநர் நிலை–1 க்கு, ஏதேனும் ஒரு பாடத்தில் இளங்கலைப் பட்டமும், M.P.Ed. பட்டமும் பெற்றிருக்க வேண்டும்.

3. ஒரு ஆண்டு படிப்பின் மூலம் பட்டம் பெற்றுள்ளவர்கள் (Double degree/ Dual degree / etc.) இப்பணித்தெரிவிற்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

4. இப்பணித் தெரிவிற்கு தேவையான கல்வித் தகுதிகளை (SSLC, HSC, U.G Degree, P.G Degree and B.Ed Degree) ஒரே நேரத்தில் பயின்று தகுதி பெற்றிருப்பின், அத்தகைய தேர்வர்கள் இப்பணித் தெரிவிற்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

5. இவ்வறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பாடங்களுக்குரிய காலிப் பணியிடங்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். பிற்சேர்க்கை–1ல் தெரிவிக்கப்பட்டுள்ள பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், தமிழ்மொழி பாடத்தினை பகுதி–1 அல்லது பகுதி–2ல், பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைக் கல்வி வரையில் பயின்றிருக்க வேண்டும். அவ்வாறு பயின்றிருக்காத தேர்வர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தமிழ் மொழி தேர்வில், பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் கண்டிப்பாக தேர்ச்சி பெற வேண்டும்.

6. வரையறுக்கப்பட்டுள்ள கல்வித்தகுதியினை, இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கான இறுதி நாளன்று பெற்றிருக்காத தேர்வர்கள், இப்பணித் தெரிவிற்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள். விண்ணப்பிக்கும் முன் தேர்வர்கள் தங்கள் தகுதியினை தாங்களே உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். தேர்வர்கள் தேர்வெழுத அனுமதிக்கப்படுதல் என்பது, அவர்களது தகுதி சரிபார்க்கப்பட்டது என்பதாக கருதப்படக்கூடாது. தேர்வரின் தகுதியானது தேர்வு வாரியத்தால் சான்றிதழ் சரிபார்ப்பின் போது மட்டுமே சரிபார்க்கப்படும்.

**குறிப்பு : பூர்த்தி செய்யப்பட்ட இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கு இறுதி நாளுக்கு முன்னதாகவே அனைத்து சான்றிதழ்களும் கண்டிப்பாக பெறப்பட்டிருக்க வேண்டும்.**

**இ) இணையான கல்வித் தகுதி:**

இப்பணித் தெரிவிற்கு வரையறுக்கப்பட்டுள்ள பாடத்தில் கல்வித் தகுதியினை பெற்றிருக்காமல், தான் பெற்றிருக்கும் கல்வித் தகுதியானது, வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிக்கான பாடத்திற்கு இணையானது என தேர்வரால் கோரப்படும் நிலையில், அதற்குரிய, தமிழக அரசால் வெளியிடப்பட்ட இணைக் கல்வித் தகுதிக்கான அரசாணையினை சான்றிதழ் சரிபார்ப்பின்போது தேர்வர்கள் கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

**5) தேர்வுக் கட்டணம்:**

அ) தேர்வர்கள் தேர்வுக் கட்டணமாக ரூ.500/– (SC/SCA/ST மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான தேர்வுக் கட்டணம் ரூ.250/– மட்டும்) இணையவழியே கடன் அட்டை (Credit Card) / பற்று அட்டை (Debit Card) / இணையவழி பண (Net Banking) பரிமாற்றம் மூலமாக மட்டுமே செலுத்த வேண்டும்.

ஆ) தேர்வர்கள், இணையவழி பணபரிமாற்றத்திற்கான சேவைக் கட்டணத்தினையும் செலுத்த வேண்டும்.

இ) மேற்கொண்டுள்ள இணையவழி அல்லாது காசோலை / அஞ்சல் ஆணை போன்றவை மூலம் செலுத்தப்படும் தேர்வுக் கட்டணங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அவ்வாறு தேர்வுக் கட்டணங்கள் செலுத்தப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் முற்றிலுமாக நிராகரிக்கப்படும்.

ஈ) விண்ணப்பித்தல் நடைமுறை முற்றிலும் இணையவழியானதாகும். இதனை தவிர்த்து ஏனைய எழுத்துபூர்வமான விண்ணப்பங்கள் தேர்வு வாரியத்தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**6) எவ்வாறு விண்ணப்பிப்பது ?**

1. ஆசிரியர் தேர்வு வாரியத்தின் www.trb.tn.nic.in இணையதளத்தில் இதற்குரிய https://trbonlineexams.in இணைப்பினை பயன்படுத்தி இணைய வழியாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

2. இணைய வழியே விண்ணப்பிக்கும்போது, தேர்வர்களால் தெரிவிக்கப்படும் விவரங்களுக்கு உரிய ஆதார ஆவணங்களை சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் நிலையில், தேர்வர்கள் கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

**7) தேர்வு அமைப்பு முறை:**

**i)** எழுத்துத் தேர்வானது 3 மணி நேரத்திற்கு, 150 கொள்குறி வினாக்களைக் கொண்டு (ஒரு தாள்) நடத்தப்படும். ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிப்பெண் வழங்கப்படும். முக்கியப்பாடம், கல்வி முறை, பொது அறிவு ஆகிய பாடங்களுக்கு பின்வருமாறு மதிப்பெண் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| முக்கியப்பாடம் | 110 |
| கல்வி பயிற்று முறை | 30 |
| பொது அறிவு | 10 |
| மொத்தம் | 150 |

பாடத்திட்டமானது, அரசிதழ் எண்.611, நாள்10.09.2001 மற்றும் அரசிதழ் எண்.356, நாள்.30.05.2002 ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்தினை ஆசிரியர் தேர்வு வாரிய அதிகாரபூர்வ இணையதளமான www.trb.tn.nic.inல் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**ii) குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்:** அரசாணை எண்.107 பள்ளிக் கல்வி நாள்.24.07.2003 மற்றும் அரசுக் கடிதம் எண்.12305/க்யு2/03–02, நாள்.08.10.2003ன்படி எழுத்துத்தேர்வில் குறைந்தபட்சம் 50 சதவீதம் மதிப்பெண்கள் (எஸ்.சி / அருந்ததியினர் இனத்தவர்களுக்கு 45 சதவிகித மதிப்பெண்கள், எஸ்.டி இனத்தவர்களுக்கு 40 சதவிகித மதிப்பெண்கள்) பெற்றிருந்தால் மட்டுமே பணித்தெரிவிற்கு தகுதியுடையவர்.

**8) தெரிவு நடைமுறை:**

பணித்தெரிவு பின்வரும் இரு நிலைகளில் நடைபெறும்.

1) எழுத்துத் தேர்வு

2) சான்றிதழ் சரிபார்ப்பின்போது தகுதிக்கான மதிப்பெண் (Weightage Marks) வழங்குதல்

**அ) எழுத்துத் தேர்வு**

02.07.2017 அன்று முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை போட்டி எழுத்துத் தேர்வு நடைபெறும். தேர்வு நடைபெறும் இடம் நுழைவுச்சீட்டில் தெரிவிக்கப்படும். விண்ணப்பித்த தகுதியான தேர்வர்களுக்கு, நுழைவுச்சீட்டுகள் ஆசிரியர் தேர்வு வாரிய அதிகாரப்பூர்வ இணையதளமான www.trb.tn.nic.inல் பதிவேற்றம் செய்யப்படும். அஞ்சல் வழியாக தேர்வர்களுக்கு எவ்விதமான கடிதமும் அனுப்பப்படமாட்டாது. எனவே, தேவையான விவரங்களுக்கு தேர்வர்கள் தேர்வு வாரிய இணையதளத்தினை பார்வையிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தேர்வர்களை தேர்வெழுத அனுமதிப்பது தொடர்பான தகுதியினைத் தீர்மானிப்பதில் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் முடிவே இறுதியானது.

**சொல்வதை எழுதுபவர்:**

விழித்திறன் குறைபாடுடைய தேர்வர்கள் / உடற்திறன் குறைபாடுடைய தேர்வர்கள் கோரிக்கை அளிக்கும்பட்சத்தில், மருத்துவச்சான்றின் அடிப்படையில் சொல்வதை எழுதுபவர் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படுவர்.

**விடைக்குறிப்புகள் :**

தேர்வு முடிவடைந்த பின்னர் தற்காலிக விடைக்குறிப்பு வெளியிடப்படும். தற்காலிக விடைக்குறிப்பின் மீது ஆட்சேபணை எழுப்ப எண்ணமுள்ள தேர்வர்கள், தற்காலிக விடைக்குறிப்பு வெளியிடப்பட்ட ஐந்து தினங்களுக்குள், தற்காலிக விடைக்குறிப்பின்மீது தங்களது ஆட்சேபணையை தகுந்த ஆதாரங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும். குறிப்பிட்டுள்ள வரையறுக்கப்பட்ட காலத்திற்குப்பின் பெறப்படும் எத்தகைய ஆட்சேபணைகள் மற்றும் ஆவணங்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது. மற்றும் தேர்வர்களால் பிற்காலத்தில் எவ்வித கோரிக்கையும் எழுப்ப இயலாது.

ஆட்சேபணைகள் கருத்திற்கொள்ளப்பட்டு, இறுதியாக விடைக்குறிப்பு வெளியிடப்படும். இந்த விடைக்குறிப்பே இறுதியானதாகும். தேர்வரின் ஆட்சேபணைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவோ அல்லது நிராகரிக்கப்பட்டதாகவோ தனியாக ஆணைகள் ஏதும் பிறப்பிக்கப்பட மாட்டாது. இறுதி விடைக்குறிப்பு மட்டுமே வெளியிடப்படும்.

ஆட்சேபணைகளை பரிசீலிப்பதற்கு அமைக்கப்படும் வல்லுநர்குழுவை பற்றி தேர்வரால், எத்தகைய ஐயப்பாடுகளையும் எழுப்ப இயலாது.

**எழுத்துத் தேர்வு முடிவுகள் வெளியீடு:**

தேர்வு எழுதிய அனைத்து தேர்வர்களுக்கும் பதிவெண்கள் வாரியாக மதிப்பெண் விவரம் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் அதிகாரப்பூர்வ www.trb.tn.nic.inல் இணையதளத்தில் வெளியிடப்படும். தேர்வு முடிவுகள் வெளியிடுவது குறித்து பத்திரிகைகள் / ஊடகங்களின் வழியே தகவல் அறிவிக்கப்படும்.

**ஆ) சான்றிதழ் சரிபார்ப்பு:**

தேர்வர்கள் எழுத்துத்தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில், நடைமுறையில் உள்ள இனசுழற்சி முறை மற்றும் தொடர்புடைய இதர விதிகளின் அடிப்படையில் 1:1 என்ற விகிதாச்சாரத்தில் தேர்வர்கள் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படுவார்கள்.

**குறிப்பு :** ஒரு குறிப்பிட்ட இனசுழற்சி இடத்திற்கு, சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படுவதற்கான குறைந்தபட்ச மதிப்பெண்ணை ஒன்றிற்கும் மேற்பட்ட தேர்வர்கள் பெற்றிருந்தால், அக்குறிப்பிட்ட இனசுழற்சி இடத்திற்கு அத்தகைய அனைத்து தேர்வர்களும் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படுவார்கள்.

சான்றிதழ் சரிபார்ப்புப் பட்டியல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பிற்கான அழைப்புக் கடிதம் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான www.trb.tn.nic.inல் மட்டும் வெளியிடப்படும்.

மேற்கண்டுள்ளவாறு, சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படுபவர்கள், அழைப்புக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து அசல் மற்றும் சான்றொப்பமிடப்பட்ட சான்றிதழ்களை, சான்றிதழ் சரிபார்ப்பிற்கு கொண்டுவர வேண்டும்.

குறிப்பிடப்பட்டுள்ள நாளில் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு, நேரில் வருகைதராத தேர்வர்களைப் பொருத்த வரையில் அவர்கள் பணித்தெரிவிற்கான குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களை பெற்றிருந்தாலும், தெரிவுப்பணிக்கு கருத்திற்கொள்ளப்பட மாட்டார்கள்.

**இ) தகுதிக்கான மதிப்பெண்கள் வழங்குதல்:**

சான்றிதழ் சரிபார்ப்பிற்குப்பின், சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்துகொண்ட தகுதியான தேர்வர்களுக்கு கீழ்க்கண்டுள்ளவாறு அவர்களுடைய தகுதிக்கான மதிப்பெண்கள் வழங்கப்படும்.

| | | **வருடங்கள்** | **மதிப்பெண்** |
|---|---|---|---|
| (i) | தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த பின் உள்ள காத்திருப்பு காலம் | 1 வருடத்திற்கு குறைவாக | 0 |
| | | 1 முதல் 3 வருடங்கள் வரை | 1 |
| | | 3 முதல் 5 வருடங்கள் வரை | 2 |
| | | 5 முதல் 10 வருடங்கள் வரை | 3 |
| | | 10 வருடங்களுக்கு மேல் | 4 |
| (ii) | அங்கீகரிக்கப்பட்ட மேல்நிலை பள்ளிகளில் விண்ணப்பிக்கும் பாடத்தில் மேல்நிலை வகுப்புகளுக்கு முதுகலை ஆசிரியராக பணியாற்றிய அனுபவம் | 1 முதல் 2 வருடங்கள் வரை | 1 |
| | | 2 முதல் 5 வருடங்கள் வரை | 2 |
| | | 5 வருடங்களுக்கு மேல் | 3 |

**9. தெரிவுப்பணி:**

சான்றிதழ் சரிபார்ப்பிற்குப்பின், ஒவ்வொரு தேர்வருக்கும் அவர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்ணுடன், தகுதிக்கான மதிப்பெண்களையும் (Weightage Marks) சேர்த்து மொத்த மதிப்பெண்கள் கணக்கிடப்படும். இதனடிப்படையில் அதன் பின்னர் புதிய தகுதிப்பட்டியல் தயார் செய்யப்படும்.

இப்புதிய தகுதிப்பட்டியலைக்கொண்டு, தகுதியுடன் இனசுழற்சி (Merit-cum-communal) முறையினை பின்பற்றி அதன் அடிப்படையில் பணித்தெரிவு மேற்கொள்ளப்படும். ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளமான www.trb.tn.nic.inல் தெரிவு முடிவுகள் வெளியிடப்படும். இறுதியாக தேர்வரின் தகுதியினை தீர்மானிப்பது ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் பணிநியமன அலுவலரின் முடிவிற்குட்பட்டது. தேர்வர் எந்த பணிக்காக எந்த துறைக்கு தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டுள்ளாரோ அத்துறையினால் தேர்வரின் தகுதி சரிபார்க்கப்பட்ட பின்னர் பணி நியமன ஆணை தொடர்புடைய துறையால் வழங்கப்படும்.

**10) சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படின், பின்வரும் சான்றிதழ்களை சான்றிதழ் சரிபார்ப்பின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும் :**

1) பின்வரும் கல்வித்தகுதிகளுக்குரிய அசல் சான்றிதழ்கள் மற்றும் மதிப்பெண் பட்டியல்கள்.

i) பத்தாம் வகுப்பு / SSLC
ii) மேனிலைக் கல்வி அல்லது அதற்கு இணையான படிப்பு
iii) தொடர்புடைய பாடத்தில் இளங்கலைப் பட்டம்
iv) தொடர்புடைய பாடத்தில் முதுகலைப் பட்டம்
v) இளங்கல்வியியல் பட்டம்

**2) இனச்சான்றிதழ்**

இன அடிப்படையில் இட ஒதுக்கீடு கோரும் தேர்வர்கள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தமிழக அரசின் அலுவலர்களிடமிருந்து இனச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

1) ST – வருவாய் கோட்ட அலுவலர் (11.11.1989க்குப் பின்னர் சான்றிதழ் வழங்கப்பட்டிருப்பின்)
2) SC/SCA – தேர்வரின் சொந்த வட்டத்தின் வட்டாட்சியர்
3) BC/MBC/DNC – தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அல்லது சிறப்பு துணை வட்டாட்சியர்.

அ) திருமணமான பெண் தேர்வர்கள், தங்களது தந்தையாரின் பெயரில் இனச்சான்றிதழ் பெற்றிருந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். (கணவரின் பெயரில் இனச்சான்றிதழ் பெற்றிருக்க கூடாது)

ஆ) பிற மாநிலம் / யூனியன் பிரதேசத்திலிருந்து பெறப்பட்ட இனச்சான்றிதழ்கள், 69 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு கருத்திற்கொள்ளப்படமாட்டாது. அத்தகைய தேர்வர்கள் பொதுப்போட்டிக்கு மட்டும் கருதப்படுவார்கள்.

**3) தமிழ் வழியில் பயின்றோருக்கான சான்று:**

தமிழ் வழியில் பயின்றோருக்கான இட ஒதுக்கீடு கோருபவர், முதுகலைப் பட்டம் மற்றும் இளங்கல்வியியல் பட்டம் ஆகிய இரு படிப்புகளையும் தமிழ்வழியில் பயின்றார் என்பதற்கான சான்றினை பிற்சேர்க்கை–2ல் வரையறுக்கப்பட்டுள்ள படிவத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

**4) வேலைவாய்ப்பக பதிவு அட்டை: (தகுதியிருப்பின்)**

வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்த பின் காத்திருக்கும் காலத்திற்குரிய தகுதிக்கான மதிப்பெண் கோருபவர், முதுகலை ஆசிரியருக்குரிய அனைத்து கல்வி தகுதிகளையும் பெற்று பின்னர் தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில், முதுகலை மற்றும் இளங்கல்வியியல் பட்டம் ஆகியவற்றை பதிவு செய்து, நடைமுறையில் உள்ள வேலைவாய்ப்பு பதிவு அட்டையினை சமர்ப்பிக்க வேண்டும்.

**5) பணி அனுபவச்சான்றிதழ்: (தகுதியிருப்பின்)**

பணி அனுபவத்திற்குரிய தகுதி மதிப்பெண் கோருபவர், முதுகலை ஆசிரியருக்குரிய அனைத்துக் கல்வித்தகுதிகளையும் பெற்று பின்னர் தொடர்புடைய பாடத்தில் முதுகலை ஆசிரியராக மேல்நிலை வகுப்புகளுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் பணியாற்றிருப்பின் அதற்குரிய சான்றினை, பிற்சேர்க்கை–3ல் வரையறுக்கப்பட்டுள்ள படிவத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

**6) ஊனமுற்றோருக்கான சான்று: (தகுதியிருப்பின்)**

மாற்றுத் திறனாளிகளுக்கான இட ஒதுக்கீட்டு சலுகையினைப் பெற விரும்பும் தேர்வர் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள உரிய ஊனமுற்றோருக்கான மருத்துவச் சான்றிதழ் மற்றும் உதவிகள் பதிவுப் புத்தகத்தினை சமர்ப்பிக்க வேண்டும்.

**பொதுவான அறிவுரைகள்:**

1. அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ள காலிப் பணியிடங்கள் உத்தேசமானவை. பணித்தெரிவினை இறுதி செய்யுமுன் பல்வேறு துறைகளின் கீழ் உள்ள முதுகலை ஆசிரியர் காலிப்பணியிடங்களுக்கேற்ப, இக்காலிப் பணியிடங்கள் மாறுதலுக்குட்பட்டவை.

2. சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படின், இணைய வழி விண்ணப்பிக்கும்போது தேர்வரால் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களுக்கு உரிய சான்றாவணங்களை முன்னிலைப்படுத்த வேண்டும். அதற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எத்தகைய கோரிக்கைகளும் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

3. இட ஒதுக்கீடு, அடிப்படைக் கல்வித்தகுதிகள், இனம் மற்றும் தகுதியினை நிர்ணயம் செய்யும் இதர விவரங்களை தவறாக / முழுமையற்ற வகையில் விண்ணபத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. அலைபேசி, எலக்ட்ரானிக் கைக்கடிகாரங்கள், நினைவகம் பொதிந்த கை வளையங்கள், கணிப்பான் உள்பட அனைத்து வகையான மின்னணு சாதனங்கள், கிளார்க் அட்டவணை போன்றவை தேர்வறைக்குள் அனுமதிக்கப்பட மாட்டாது.

5. தேர்வர்கள் கொண்டுவரும் எந்தவொரு பொருளையும் பாதுகாத்து வைப்பதற்கென எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்படாத நிலையினை கருத்தில் கொண்டு, அலைபேசி உள்ளிட்ட எந்தவொரு தடைசெய்யப்பட்ட பொருட்களை தேர்வு மையத்திற்கு எடுத்து வர வேண்டாம் என தேர்வர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

6. எந்தவொரு தேர்வரும், எந்தவொரு விரும்பத்தகாத வகையிலும், தேர்வறைக்குள்ளாகவோ, தேர்வாளரிடமோ நடந்துகொள்ளக் கூடாது. அத்தகைய எந்தவொரு செயலும் கடுமையான தவறாகக் கருதப்படுவதுடன், உரிய தண்டனை வழங்கப்படும்.

7. தேர்வர்கள் தங்களது சொந்த செலவில் தேர்வெழுதவும், சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படின் வருகை தரவும் வேண்டும். பணப்படி / அகவிலைப்படி ஏதும் அனுமதிக்கப்பட மாட்டாது.

8. தெரிவு நடைமுறையினைப் பொறுத்தவரையில், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் முடிவே இறுதியானது. தெரிவு செய்யப்படாமை குறித்து பெறப்படும் எத்தகைய கோரிக்கையும், எக்காரணத்திற்காகவும் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

9. எந்தவொரு முறையிலும் சிபாரிசுகளை நாடும் நிலையில், அத்தகைய செயல் தகுதியிழப்பிற்கு வழிவகை செய்யும்.

10. 29.05.2017 அன்று பிற்பகல் 11.59 மணி வரையில் மட்டுமே இணையவழியே விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க இயலும். அதற்குப்பின் இணைப்பு துண்டிக்கப்படும்.

**தலைவர்**

# ANNEXURE I

Subject-wise Vacancy Details

**Department :** School Education

| Sl.No. | Subject | Backlog Vacancy | Current Vacancy | Total |
|---|---|---|---|---|
| 1 | Tamil | 3 | 215 | 218 |
| 2 | English | 3 | 228 | 231 |
| 3 | Mathematics | 1 | 179 | 180 |
| 4 | Physics | 2 | 174 | 176 |
| 5 | Chemistry | 2 | 166 | 168 |
| 6 | Botany | - | 87 | 87 |
| 7 | Zoology | - | 102 | 102 |
| 8 | History | 9 | 137 | 146 |
| 9 | Geography | - | 18 | 18 |
| 10 | Economics | 5 | 134 | 139 |
| 11 | Commerce | 2 | 123 | 125 |
| 12 | Political Science | - | 24 | 24 |
| 13 | Bio-Chemistry | - | 1 | 1 |
| 14 | Micro Biology | - | 1 | 1 |
| 15 | Home Science | - | 7 | 7 |
| 16 | Telugu | - | 1 | 1 |
| 17 | Physical Director Grade-I | - | 39 | 39 |
| **Total** | | **27** | **1636** | **1663** |

**ANNEXURE II**

**Tamil Medium**: Persons Studied in Tamil Medium (PSTM) have to produce evidence, such as Transfer Certificate, Provisional Certificate / Convocation Certificate / Degree Certificate / mark sheets received from the Board or University or from the Institution, with a recording that he / she studied the **prescribed educational Qualification in Tamil Medium.** If no evidence for 'Persons studied in Tamil Medium' is produced, then a certificate from the Head of the Institution as given below must be furnished:-

**<u>PSTM Certificate (Model Format)</u>**

**(To be issued only by the Head of Institution)**

This is to certify that Thiru/Tmt/Selvi. ..................... (Name)................. has studied ................. (course Name M.A/M.Sc/B.Ed./M.P.Ed) during the years ............to.........in Tamil Medium. This certificate is issued after verifying the course content / Statement of Marks / Transfer Certificate.

**Registrar/Principal/Head of the Institution**

Place :

Date :

Office Seal

## ANNEXURE III

For submission to
Teachers Recruitment Board, Chennai – 600 006

### TEACHING EXPERIENCE CERTIFICATE

(Separate form should be used for each Institution)

1. Name of the Candidate :
2. Name and Address of the Institution in which employed :
3. Type of Institution (Govt / Aided /Self-Financing) :
4. Date of appointment as Post Graduate Assistant :
5. Subjects taught :

Passport size – Photograph of the Candidate duly attested by the Certificate issuing authority(sign and seal should be partly in photograph and application)

| **Sl.No** | **Subject Taught** | **Classes in Higher Secondary** | **No of periods per week** | **Period of Service** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | **Date From** | **Date To** | **Period** | | |
| | | | | | | **Y** | **M** | **D** |
| 1 | | | | | | | | |
| 2 | | | | | | | | |
| 3 | | | | | | | | |
| 4 | | | | | | | | |
| 5 | | | | | | | | |
| **Total** | | | | | | | | |

Certified that the above facts are verified with pay acquittance and other records available on behalf of the individual and found correct.

Place :
Date :
Seal :

Principal / Head of the Institution

---

### Counter Signing Authority Certificate

Verified the above facts with reference to the records available in the School and in the Office are found correct.

Ref. No.
Place :
Date :
Seal :

Signature :
Name :
Designation :

**Authorised Signatory**
(Chief Educational Officer)
***For instructions P.T.O***

## INSTRUCTIONS FOR CANDIDATE'S (ANNEXURE III)

- Separate form should be used for each institution worked in.

- The Teaching Experience Certificate should be properly attested, signed and proper seal affixed by the concerned Chief Education Officer

- Teaching Experience Certificate for Higher Secondary Classes in the subject (Major subject studied) alone will be considered.

- Inconsistencies / errors that are not attested by the issuing officer with seal will result in rejection of the certificate.

- The counter signing authorities should keep one original copy of the certificates issued by them for future verification.

- A passport size photograph should be affixed in each certificate. This photograph has to be attested by the Principal /Head of the Institution issuing the certificate.